தமிழ் நாடு அரசு

**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர் நலம் – கல்வி – பிற்படுத்தப்பட்டோர் குடும்பத்தைச் சேர்ந்த முதல் மாணவனுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளித்தல் – ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

அரசு ஆணை (நிலை) எண்.82. நாள்: 26.4.90

சித்திரை 13 பிரமோதூத
திருவள்ளுவர் ஆண்டு 2021.

பார்வை:

1. அரசு நிலையாணை எண்.658 பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறை நாள் 25.7.89.
2. அரசு கடித எண்.42794/பிந.2/89-7 பிற்படுத்தப்பட்டோர் நலம் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறை நாள் 14.3.90.

....

ஆணை:

பார்வை 1ல் கண்டுள்ள அரசாணையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினை சேர்ந்த மாணவர்களுக்கு பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். போன்ற இளங்கலை பட்டப்படிப்பு வரை வருமான வரம்பின்றி, இலவசக் கல்வி அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. மேலும் ஒரு சலுகையாக பிற்படுத்தப்பட்டோர் குடும்பத்தைச் சார்ந்த குறிப்பாக பொருளாதார ரீதியில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு இந்த இலவச கல்வித் திட்டத்தை விரிவு படுத்த வேண்டுமென கீழ்க்கண்டவாறு அரசு முடிவு செய்துள்ளது.

3. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு இளங்கலை பட்டப்படிப்பு வரையில் வரும் கல்வியாண்டில் இருந்து அதாவது (1990-91) கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் பிற கட்டாயக் கட்டணம் ஆகியவைகளை செலுத்துவதிலிருந்து விலக்களித்து இலவசக் கல்வி வழங்கப்படும் என்று அரசு ஆணையிடுகிறது:

(1) பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவரின் பெற்றோரோ அல்லது உடன்பிறப்புகளோ அந்த குடும்பத்தில் இதுவரையில் யாரும் பல்கலைக்கழகப் பட்டம் பெறாதவர்களாக இருக்க வேண்டும்;

(2) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.12,000 அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்;

..2

3. சலுகை பெ...பவர் அந்த குடும்பத்தைச் சார்ந்த இளங்கலை பட்டப்படிப்பு பயில இருக்கும் முதல் மாணவராக இருக்க வேண்டும்.

4. இந்த திட்டத்தின் பயனைப் பெறுவதற்காகத் தரும் வருமான சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ், தவறானவை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் தொடர்புடையவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

5. மேலே குறிப்பிடப்பட்ட இலவசக் கல்வி திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.80 இலட்சம் (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) செலவினமாக அரசு வழங்குகிறது.

6. மேற்கண்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலவிடப்படலாம்.

"2225. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 03. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277. கல்வி - எட்டாவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் - II. மாநிலத் திட்டம் - JO. பிற்படுத்தப்பட்டோருக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளித்தல் (டி.பி.கோடு எண். 2225 03 277 JO 0000)

கோரிக்கை எண். 32 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்

7. மேலே பத்தி 5-ல் காணப்படும் செலவினம் புதிய திட்டப் பணியாகக் கருதப்படும். இதற்காக சட்டப்பேரவையின் ஒப்புதலை நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரை, இத்திட்டத்திற்கு ஆரம்பச் செலவினை சில்லரைச் செலவின நிதியிலிருந்து முன்பணமாகப் பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (BG.II)த்துறையின் வெளியிடப்படும். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் இது குறித்த தக்க செயற்குறிப்புகளை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இரண்டு நகல்களை நிதித்துறைக்கு அனுப்பிவிட்டு இத்துறைக்குத் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பாணை எண் 530/ D.S. (EM)/ 90-1 நாள் 2[illegible].90ல் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜே. ஆர், இராமநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை-
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை-
மிகப் பிற்படுத்தப்பட்டோர் சென்னை-18.
மாநிலக் கணக்காயர், சென்னை-18. (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை-35.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை) சென்னை (தெற்கு, வடக்கு, கிழக்கு) சென்னை

பெறுநர்:

எல்லா மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

தலைமைச் செயலக அனைத்து துறைகள்.

எல்லா கருவூல அலுவலர்கள்.

ம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.

நிதி (BC) (BG.I) (BG.II-3 copies) (SW)

சென்னை-9

இயக்குநர், தகவல் தொகுப்பு மையம், சென்னை-25.
(Director, Data Processing Centre, Madras-25)

நகல்:

கல்வி / நிதி / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.

உத்திரவின்படி அனுப்பப்படுகிறது.

பிரிவு அலுவலர்